# அறவழி
NONVIOLENCE


அறமுரசு

உனது நெஞ்சிற்கு துரோகம் செய்யாதே;
மனச்சாட்சியின்படி நட;
நிச்சயம்
உனக்கு வெற்றி கிடைக்கும்.

4-10-1989

அறம் 3 ★ மாத இதழ் ★ ஐப்பசி 1989 ★ பக்கம் 6 ★ விலை 3-00 ★ வழி 26

# எழுத்தறிவின்மையை போக்க திடசங்கற்பம் பூணுவோம்

**எழுத்தறிவின்மையை போக்குவதற்கு இன்று திடசங்கற்பம் பூணுவோம் - இன்று ''எழுத்தறிவின்மையை போக்குவோம்'' என்று உறுதி மொழி எடுக்க வேண்டியது எழுத்தறிவற்ற ஒவ்வொருவர்களின் கடமையாகும் — இவ்வாறு வைத்திய கலாநிதி வைத்திய வாரிதி பே. பிலிப்ஸ். ஜே. பி. தெரிவித்தார்.**

சாவகச்சேரி மகிழங்கேணி கிராமத்தில் அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்பட்ட சர்வதேச எழுத்தறிவ தினத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேஅவர் இவ்வாறு கூறினார்.

திருவள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் திரு. நாகராசா தலைமையில்நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்துப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமான கடமையாகும்.

''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்ற முதுமொழிக்கிணங்க அறவழிப்போராட்டக் குழு இங்குள்ள மக்கள் பலருக்கு எழுத்தறிவை ஏற்படுத்தி இறைவனாக திகழ்கிறது.

பசித்தவனுக்கு உணவும், தாகமுள்ளவனுக்கு தண்ணீரும் நோயாளிக்கு மருந்தும் எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அதேபோல படிப்பறிவற்றவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்தலும் அவசியமாகிறது.''

சுமார் ஐம்பதிற்குமதிகமான மகிழங்கேணி கிராம மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் இருந்த கரும்பலகையில் தமது கையெழுத்துக்களை எழுதி காண்பித்தனர்.

இவர்களுக்கான எழுத்துப் பயிற்சியை திருமதி இராஜி சண்முகநாதன் ஒரு வார காலமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் சர்வதேச எழுத்தறிவுதின அறிமுக உரையை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் ''ஐ. நாடுகள் சபையினால் சர்வதேச எழுத்தாளர் தினமாக இன்றைய தினம் (8-09-89) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தினம் உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்படுகிறது.

நாற்பது வீதமான தென் கிழக்காசிய மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் இன்று நேரு சமாதியின் முன்னிலையில் ஏழாயிரத்திற்கும் அதிகமானோர் ''எழுதறிவின்மையை போக்குவோம்'' என உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள். அத்துடன் நான்கு இலட்சம் மக்களுக்கு எழுத்தறிவு ஊட்டும் நிகழ்ச்சியும் ஆரம்பித்து வைக்கப்படுகிறது'' என்று தெரிவித்தார்.

அறவழிப்போராட்டக் குழு தலைவர் திரு. வி. சு. துரைராசா பேசுகையில்; ''நாம் எதுவும் தெரியாதவர்களாக இருக்கலாம் ஆனால் கையெழுத்துப்போடத் தெரியாதவர்களாக இருக்கக்கூடாது. எம்மில் சிலர் இன்னும் பெருவிரல் அடையாளம் போடுபவர்களாக இருக்கும் நிலை மாற வேண்டும். சொந்தக் கையெழுத்து வைக்கத் தெரியாத வரை எமக்கு விமோசனம் இல்லை'' என்று தெரிவித்தார்.

## மானிட உயிரின் மாண்பினை மதி இல்லாவிடில் அழிவே எமது கதி

''எமது உயிர் காப்பாற்றப்படவேண்டுமானால் மற்றவர் உயிரை நாம் பாதுகாக்கவேண்டும்'' என்று யாழ். மறை மாவட்ட நீதி, சமாதான அபிவிருத்திக் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் வளர்ந்து செல்லும் பயங்கர நிகழ்வுகள், உயிரிழப்புகளைக் கொண்ட சூழல் மத்தியிலும், எந்நேரத்திலும் எவரினதும் உயிர் பறிக்கப்படலாம் என்ற வன்முறை வட்டத்திற்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்நிலை இனியும் நீடிக்க வேண்டுமா? இதனை யாரரவது நிறுத்துவார்கள் என்ற எதிர் பார்ப்பு மனநிலை மாறவேண்டும். அமைதியும், அன்பும், நீதியும், சமாதானமும் எம்மிடையே நிலவ நாம் என்ன செய்யப்போகிறோம்? என்ற நல்லெண்ணம் நமக்குள்ளே வேர்விடவேண்டும். இவ்வளவு காலமும் எம்முயிரைக் காப்பாற்ற அடுத்தவர் உயிரைப் பறித்தோம். உண்மையில் யாராவது ஒருவர் இறக்கும் போது என்னில் ஒருபகுதியே இறக்கின்றது. இந்நிலை நீடிக்குமானால் எனதும், எமதும் எதிர் காலமே சூனியமாகிவிடும்.

எனவே அடுத்தவனுயிர் என்று அசட்டை செய்துவிட முடியாது. இந்நிலை எமது இனத்தை அசுர வேகத்தில் அழித்துக் கொண்டிருப்பதால் நாம் ஒவ்வொருவரும் அதை மாற்றியமைக்க ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம். ஒருவர் ஒருவரின் உயிரை மதிப்போம்.

## உலக உயிர் பாதுகாப்பு வாரம்

உலகில் அமைதியை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக, யாழ், மாவட்ட இந்து இளைஞர் பேரவை அக்டோபர் 30ம் திகதி முதல் நவம்பர் 4ம்திகதி வரை, உலக உயிர் பாதுகாப்பு வாரமாகப் பிரகடனம் செய்துள்ளது.

இவ் வாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு ஒரு கடிதத்தை இப் பேரவையினர் அனுப்பி வைத்துள்ளனர்.

# இலங்கையில் சமாதானம் வேண்டி சுவிஸில் தமிழ் யாத்திரை விழா

(சுவிஸிலிருந்து நமது பிரதிநிதி)

இலங்கையில் அமைதியும், சமாதானமும் நிலவவேண்டி கடந்த ஆவணிமாதம் ஆறும் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவிஸிலுள்ள அயின்சீடல்ன் என்னுமிடத்தில் தமிழில் சமாதான புனித யாத்திரை விழாவொன்று நடைபெற்றது.

திரு. பீற்றர் கனியூட்டின் சிந்தனையிலே உருவான இவ் யாத்திரை திருவிழாவில் சுமார் எழுநூறிற்குமதிகமான மக்கள் கலந்துகொண்டனர். தமிழ் பெண்கள் கூடுதலானோர் சாறியுடனும், ஆண்களில் பலர் வேட்டியுடனும் விழாவிற்கு வந்திருந்தனர்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக திருப்பலிப் பூசையும், மாதாவின் திருப் பவனியும் இடம் பெற்றது. நண்பகல் 12-15 மணிக்கு பிறநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆறு தமிழ்க் குழுக்களின் கூட்டுத்திருப்பலியுடன் விழா ஆரம்பமாகியது.

விழாவிற்கு வருகை தந்தவர்கள் சந்தனப் பொட்டு வைத்தும், பன்னீர் தெளித்தும் வரவேற்கப்பட்டனர். விசேடமாக குருமாருக்கு ஆரம்ப வாசலில் வைத்து ஆலாத்தி எடுக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டது.

வரவேற்புப் பாடலுடன் ஆரம்பமான திருப்பலியில் தமிழிலும், ஜெர்மன் மொழியிலும் சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

பிரசங்கத்தில் 'சமாதானம்' என்ற கருத்து அழுத்திக் கூறப்பட்டதுடன் தமிழ் மொழியிலே இது முழுமையாக நடத்தப்பட்டது.

திருப்பலின் பின்னர் விழாவில் கலந்துகொண்டவர்கள் இருவரிசையாகப் பிரிந்து வீதியில் ஊர்வலமாகச் செல்ல அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் மாதா திருச்சுரூபம் பவனி வந்தது.

இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பயபக்தியோடு செபங்களிலும், பாடல்களிலும் பங்கு கொண்டனர். ஊர்வலத்தின் மத்தியில் சிறிது நேர தாமதத்தை ஏற்படுத்தி ஆர்ப்பரிப்புப் பாடல் பாடப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் திருப்பலி நடைபெற்ற இடத்திற்கு ஊர்வலத்தினர் சென்று இலங்கை நாட்டின் சமாதானத்திற்காக விசேஷ செபம் சொல்லப்பட்டது.

மனத்தை உருக்கும் வகையில் சொல்லப்பட்ட இச் செபத்தைச் சொன்னவரே தன்னை அறியாமலே அழத் தொடங்கிவிட்டார். இதனை அவதானித்த மக்களில் பலரும் அழத்தொடங்கினார்கள்.

பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன், தமிழ் ஆகிய மொழிகளில் விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றி கூறப்பட்டதுடன் மாதாசுரூப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

திரு. பீற்றர் கனியூட்டின் முயற்சியினால் பல்வேறு மாநகரங்களிலுமுள்ள தமிழ் பிரதிநிதிகளின் உதவியுடன் வெகு சிறப்பாக இத்திருவிழா கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இத்திருநாளை எதிர்த்து சுவிஸ் மக்களை ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டும் நோக்குடன், விழாவிற்கு முதல்நாள் இந்த ஆலயத்திற்கு கடிதம் ஒன்று சிலரால் அனுப்பிவைக்கப்பட்டது.

குழப்பம் எதுவும் ஏற்படக் கூடாது என்பதற்காக சுவிஸ் பொலிஸார் விழா இறுதிவரையும் சிவில் உடையில் உசார் நிலையில் இருந்தார்கள்.

# ★ நேரம் பொன் போன்றதே!

மனிதனுடைய வாழ்வில் நேரம் மிக முக்கியமானதாகும். நேரத்தை உரியவாறு பயன்படுத்தத் தவறும் மனிதன் — தன் வாழ்வில் முக்கிய பாகத்தை இழந்து விடுவான் என்று கூறலாம்.

நேரம் பொன் போன்றதாகும். இயற்கை எல்லா மனிதர்களுக்கும் இருபத்துநான்குமணி நேரத்தை ஒரு நாளுக்குக் கொடுத்திருக்கிறது. மனித முன்னேற்றத்தில் நேரத்தைப் பயன்படுத்தும் முறை ஒரு முக்கியமான பங்கைவகிக்கின்றது.

நம்நாட்டவர்களுக்கு நேரத்தின் முக்கியத்துவம் அவ்வளவு பெரிதாகத் தெரிவதில்லை என்பதை அன்றாடம் காணக்கூடியதாகவுள்ளது.

நேரம் நம் வாழ்வில் ஒவ்வொரு விடயத்திலும் முக்கியமான பங்களிப்புச் செய்து வருகின்றது. ஆயினும், நாம் இந்த விடயத்தில் அசட்டை காட்டி, அக்கறையின்றி இருக்கின்றோம் என்பது வெள்ளிடைமலை.

நம்நாட்டில் நேரத்தின் பெறுமதியைச் சரிவர உணராமல், அறியாமல் மிகப் பெரும்பான்மையானவர்கள் இருந்து வருகின்றார்கள் என்பதையும் காண முடிகின்றது.

உலகில், நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் பெறுமதியை நன்கு உணர்ந்தவர்கள் தத்தம் வாழ்வில் எப்படியெல்லாம் முன்னேறி, வளர்ச்சி அடைந்து, தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் சாதனைகளைப் படைத்துள்ளனர், படைத்து வருகின்றார்கள் என்பதை அறியலாம்.

பொதுவாக, நம்மவர்கள் மத்தியில் எதற்கெடுத்தாலும் ''நேரம் இல்லை'' ''நேரம் காணாது'' ''நேரம் எங்கே'' என்று சொல்லி வருவதை நாம் பார்த்து வருகின்றோம். இப்படிக்கூறுவது எம்மத்தியில் பல தரப்பட்டவர்களிடையேயும் ஒருவித ''பழக்கதோஷம்'' போலாகிவிட்டது.

— ஜீவகன் —

நமது மாத வருமானத்தை எப்படிச் செலவு செய்தல் வேண்டும் என நாம் 'பட்ஜட்' போடுவது போலவே, ஒவ்வொரு நாளிலும் 24 மணி நேரத்தை எப்படிப் பயன் தரும் வகையில் செலவு செய்யலாம் என நாம் ''நேர பட்ஜட்'' போட்டுக் கொள்வது மிக அவசியமாகும்.

மனித வாழ்வில் பணத்தை, உடைமையை இழந்தால் அவற்றினை நமது கடின உழைப்பினால் மீண்டும் சேமித்துக் கொள்ள முடியும். ஆனால் நேரத்தை மீண்டும் ஒருமுறை சேமித்துக் கொள்ள முடியாது என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும்.

வாழ்வில் துடிப்புடன், திட்டமிட்டுச் செயல்படுபவர்களுக்கு ஒரு நாளில் இருக்கக் கூடிய 24 மணி நேரம் கூடப் போதுமானதாகஇருப்பதில்லை.

வாழ்க்கையில் எவ்வளவு நேரம் விழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைவிட விழித்துக் கொண்ட நேரத்தில் என்ன செய்கிறோம் என்பது தான் முக்கியம். ஒரு மனிதனுக்கு அவனது வாழ்நாளில் கிடைத்த மிகப் பெரிய செல்வம் நேரமாகும். ஆயினும், நம்மில்எத்தனைபேர் நேரத்தை ஒரு செல்வம் என்று கருதுகிறார்கள்.

நம் மத்தியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள், வைபவங்களில் எத்தனை வீதமானவை குறிப்பிட்ட நேரங்களில் ஆரம்பமாகி, குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கப்படுகின்றன எனச் சிந்தித்துப் பார்ப்போமாயின் நாம் எங்கே? எவ்விதம்? தவறுகளை இழைத்து வருகின்றோம் என்பதை அறியக் கூடும்.

நேரத்தை ஏய்ப்பதில், நேரத்தை உரிய விதத்தில் பயன்படுத்தாமல் விடுவதில் நம்மவர்கள் திறமைசாலிகள் என்றுகூடக் கூற முடியும்.

வளர்ச்சியடைந்துவிட்ட நாடுகளில் வாழ்கின்ற மனிதர்கள் நேரத்தைப் போற்றி, மதித்து வரும் பழக்கத்தினை சிறு பராயம் தொட்டே கைக்கொண்டு வருகின்றார்கள். அதனால்தான் அம் மக்கள் தம் வாழ்வில் ஒவ்வொரு விடயத்திலும் அபரிமிதமான முன்னேற்றம், வளர்ச்சி கண்டு வருகிறார்கள்.

நம்நாட்டில் நேரம் சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதற்குப் பல நூறு உதாரணங்களைக் காட்டலாம்.

பொதுவாக, ரயில் சேவை, பஸ் சேவைகள் விடயத்தில் - அவை ஒரு இடத்தில் இருந்து இத்தனை மணிக்குப் புறப்படும் என்றும், அவை இன்ன நேரத்துக்குக் குறிப்பிட்ட இடத்தை அடையும் என்றும் கூறுவார்கள். ஆனால், அவர்கள் நேரசூசிப் பிரகாரம் அவை புறப்படவும் மாட்டா; அடையவும் மாட்டா.

இவைபற்றிக்காரணம் கேட்போமாயின் - பல்வேறு விதமான எதிர்மறைக் கருத்துக்களைக் கூறி ''நியாயம்'' கற்பித்து விடுவார்கள்.

நேரத்தை அலட்சியம் செய்கின்றவனை நேரம் அலட்சியம் செய்து விடுகின்றது. ஆழமாக நாம் சிந்தித்துப் பார்ப்போமாயின் மனித வாழ்க்கை என்பதே நேரத்தின் தொகுப்புத் தான்.

நம்நாட்டில் நேரத்தை மதிக்காமல் நேரத்தை அலட்சியம் செய்த பல இளைஞர்கள், இன்று வெளிநாடுகளில், நேரத்தை மதித்து, நேரம் தப்பாது தத்தமது வேலைகளிலும், ஏனைய அலுவல்களிலும் ஈடுபட்டு வருவதை நான் பல ஐரோப்பிய நாடுகளில் நேரில் பார்த்திருக்கின்றேன்.

அவர்கள் அந்தந்த நாடுகளில் நேரத்துக்குக் கொடுத்து வருகின்ற முக்கியத்துவங்களைப் பார்த்துப் பிரமிப்படைந்ததுடன், ஒருவகையில் பெருமையும் அடைந்தேன்.

''நேரம்தான் பணம்.'' உலகில் பல அனுபவசாலிகள் இதை வலியுறுத்தியுள்ளனர். வாழ்வில் கடவுளுக்கு அடுத்தபடியாக மனிதன் மதிக்க வேண்டியது நேரம்தான்.

ஆகையால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மணி நேரத்தையும் பெருமுயற்சியுடன் திட்டமிட்டுப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள், சாதனையாளர்கள், அறிஞர்கள் யாவருமே நேரத்தை மதித்தார்கள். தம் பணிகளை உரியவாறு, உரிய நேரத்தில் செய்து கொண்டார்கள்; சாதனை புரிந்தார்கள்.

எனவே வாழ்க்கையில் முன்னேறத்துடிக்கும் அன்பு நெஞ்சங்களே! நேரத்தை மதியுங்கள் - நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். நீங்களும் வாழ்வில் சாதனை புரிவீர்கள்!


## அறவழி

**நிர்வாகம்**
புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல : 2
சாவகச்சேரி

**ஆசிரியர்**
க. ஜீவகதாஸ்

**இணையாசிரியர்**
என். கே. துரைசிங்கம்

**அச்சகம்**
புனிதவளன் கத்தோலிக்க- அச்சகம்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்

**தனிப்பிரதி விலை**
ரூபா : 3-00

**சந்தா விபரம்**
உள்ளூர் ஒருவருடம் ரூபா 40-00

**வெளிநாடு**
இந்தியா - ரூபா 110-00
மத்தியகிழக்கு - ரூபா 120-00
ஐரோப்பா - ரூபா 140-00
அமெரிக்கா, கனடா } ரூபா 160-00

சந்தாதொகையை காசோலையாகவோ, மணிஆடராகவோ '' அறவழி-பத்திரிகை க/கு இல: 2365 எனக்குறித்து அனுப்புக.

— நிர்வாகி


# குறிக்கோள்

ஒரு குறிக்கோள் இல்லாத வாழ்க்கை மனித வாழ்க்கையாகாது. எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறிக்கோளோடு வாழ வேண்டியது அவசியமாகும்.

தன் குறிக்கோளில் பெறும் வெற்றியே வாழ்க்கையில் வெற்றியாகும்.

ஒருவனுடைய குறிக்கோள் என்ன என்று அறிந்து விட்டால், பின்னர் அவனைப்பற்றி அறிதல் அரிதன்று.

குறிக்கோள் ஒரு கொள்கையாக இருக்கும்போது கனவாகும். அந்தக் குறிக்கோள் வெற்றி பெறும்போது நனவாகும்.

இறப்பது உறுதி என்றாலும், இறப்பதற்கு முன் ஒரு பெரும் குறிக்கோளைக் கொள்.

ஒருவன் மற்றொருவனுடைய குறிக்கோளுக்காக இறக்க முடியும். ஆனால், அவன் வாழ்வதானால் தன்னுடைய குறிக்கோளுக்காக வாழ்தல் வேண்டும்.

தாழ்ந்த குறிக்கோளில் வெற்றியடைவதை விட, உயர்ந்த குறிக்கோளில் தோல்வியடைவது மேலானது.

மலருக்கு மணம் இருப்பது போல — வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் இல்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கப்பல் போன்றவன்.

குறிக்கோளைப் போற்றாமல் புகழைத் தேடி அலைந்தால், கோழையாவது உண்மைதான்.

உன்னால் எதைச் செய்ய முடியாது என்று மற்றவர்கள் முழங்குகின்றார்களோ அந்தச் செயலை நீ செய்து முடிப்பதிலேதான் உன் வாழ்க்கையில் மிகப் பெரிய மகிழ்ச்சி அடங்கியிருக்கின்றது.

எத்தனை இடையூறுகள் வந்தாலுமே எடுத்த காரியத்தை உறுதியாகச்செய்து முடிப்பதே சிறந்த குறிக்கோள்.

எண்ணித்துணிந்த பின் உலகமே உன்னை எதிர்த்து நின்றாலும் கொண்ட குறிக்கோளைக் கைவிடாதே.

குறிக்கோள் குன்றாமல், உறுதி குலையாமல் இருந்தால் தோல்வி ஏற்படவே ஏற்படாது.

## அறவழிக் கிராமங்களில் ஹொலிகுறொஸ் மருத்துவ சேவை

ஹொலி குறொஸ் மருத்துவ சேவையினர் கடந்த மாதம் 15-ம் திகதி அறவழிப் போராட்டக் குழுவின் கிராமங்களாகிய மகிழங்கேணி, கள்ளி நகர், கிராமங்களில் இலவச மருத்துவசேவை முகாம்களை நடாத்தினர்.

இம்முகாம்களின்போது நூற்றுக்கணக்கான வறிய மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டதுடன், இலவச மருந்துகளையும் ஹொலிகுறொஸ் மருத்துவ சேவையினர் வழங்கினர்.

## எழுத்தாளர் பயிற்சி நெறி

வளரும் இளம் எழுத்தாளர்களை உருவாக்க உதவும் பொருட்டு அறவழிப்போராட்டக்குழு எழுத்தாளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்றினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறியில் பங்குகொள்ள விரும்பும் ஆண்—பெண் இருபாலாரும் தமது விண்ணப்பங்களை அறவழிப் போராட்டக் குழுவிற்கு 25-10-89க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

அன்பு கனிந்த அறவழிக் குழுவினர்க்கு!

இன்றும் என்றும் உங்கள் பணி தொடர்வதற்கு இறைவனை வேண்டுகின்றேன்.

மேலும்,

நான் ''அறவழி'' பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வருகின்றேன். அவற்றின் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் ஓர் நன்னெறிச் சமுதாயத்திற்கு வித்திடுவனவாகவுள்ளன. எனவே இப்பத்திரிகையினை மாத இதழாக இல்லாது வார இதழாக வெளியிட்டால் என்ன? அத்துடன் இப்பத்ரிகையில் வாசகர் கருத்துக்கென ஓர் இடம் ஒதுக்கினால் நன்றாக இருக்கும் அல்லவா? இவற்றில் கதைகள் வெளிவருவது ஏன் குறைவாகவுள்ளது?

நன்றி.

மீசாலை வடக்கு
கொடிகாமம்

இப்படிக்கு
அறப்பிரியன் த. கௌரிபாலன்.

## விற்பனையாளர் தேவை

'அறவழி' பத்திரிகைக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

விற்பனையாளர்களுக்கு நல்ல கமிஷன் வழங்கப்படும்.


ஆர்வமுள்ளோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
புதிய சமுதாய
வெளியீட்டகம்
த. பெ. இல. 2
சாவகச்சேரி.

**நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது**

ஒக்ரோபர் 2 காந்தி பிறந்த தினம்

# சத்தியம் வெல்லும்-இதை சரித்திரம் சொல்லும்



○ அக்ரோபர் - 2
மனித வரலாற்றிலே
ஓர்
உன்னதமான நாள்
என்பதனை
நிரூபித்து விட்டவர்
நீங்கள்!

○ உங்கள்
ஜனனத்தின் பின்னர்தானும்
மனிதம் என்பது
உலகில் எழுந்தது.

○ சத்தியம் வெல்லும் - இதை
சரித்திரம் சொல்லும்
என்பதற்கு
நீங்கள்
ஒரு
சாட்சி.

○ 'அஹிம்சை' என்ற
ஆயுதமே உங்கள்
போராட்டத்தின்
படிக்கட்டுக்கள்
இதனை
சரித்திரம் சொல்கிறது.

○ 'வெள்ளையனே
வெளியேறு'
என்று
வெற்றுக் கோஷம் மட்டும்
எழுப்பவில்லை
வெளியேற்றியும்
வைத்தீர்கள்.

○ அன்பு, கருணை, அஹிம்சை
ஜீவகாருண்ணியம்
போன்றவற்றின்
மறு அவதாரமே
நீங்கள் தான்.

○ உங்கள்
வாசலுக்கு
கதவுகளில்லை
அது
எப்பொழுதும்
திறந்திருக்கும்.
இதனால் தான்
நாற்பது கோடி
மனித உயிர்களும்
உங்களின் பின்னாலே
அணி திரண்டது.

○ தியாகத்தின
மொத்த வடிவமே'
நீங்கள்
மரணித்து விட்டதாக
சொல்கிறார்கள்
என்னால் நம்பமுடிய
வில்லையே
..............
ஏனெனில் — நீங்கள்
எம்முடன்
வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்.

○ உங்கள்
கொள்கை, இலட்சியம்
சிந்தனை யாவும்
இங்கு
வாழ்ந்து
கொண்டிருக்கின்றன.

○ அறவழி
என்னும் அத்தியாயம்
இங்கு
எழுதப்படுகிறது
இதனால்
புதிய சமுதாயம்
ஒன்று
எழுந்து வருகிறது
அது
இனிமேல் வரும்
பேதங்களுக்கு
முடிவு கட்டும்.
அத்திவாரம்
போட்டாச்சு - இனி
எழ வேண்டியது
கட்டடம் மட்டுமே.

○ மாகாத்மாவே
உண்மைக்காய்தானே
உங்கள் உயிரை
கொடுத்தீர்கள்.
அமைதிக்காய்தானே
மெழுகாய் உருகினீர்கள்.
ஆனால்...
இன்று நடப்பது என்ன
அமைதிக்கும்
உண்மைக்கும்
வேட்டு வைத்து
விட்டார்கள்
அதனால்
உலக நாடுகளிடையே
நிதமும் சண்டைகள்.

○ மானிடத்தின் விலை
துரும்பாகி விட்டது
இன்று.

○ கத்தியின்றி, யுத்தமின்றி
புத்தி கொண்டு
சித்தி பெற்ற
ஒரு காலம் இருந்தது
என்பதனை
நாம் கனவில்தான்
காண
வேண்டியிருக்கிறது.

○ பலர்
உங்களை மறந்து
விட்டார்கள்...
ஆனால்
இன்னும் சிலர்
நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள்
அதனால்தான்
உலகம் இன்னும்
இயங்கிக்
கொண்டிருக்கிறது.

○ காந்தி தாத்தாவே
உங்கள்
வரலாற்றைப் புரட்டிய
பொழுது
என்னுள்
புதியவொரு 'அர்த்தம்'
உருவானது.
உங்களை அறிந்த
பிறகுதான்
நானுமொரு மனிதனாக
வேண்டும் என்பதனை
பிரகடனம் செய்கிறேன்.

○ சிறிய துண்டு
உங்கள் தேசிய உடை
சுதேசியப் பொருட்கள்
உங்கள்
உடன் பிறந்தவை.

○ துப்பாக்கிகள் தான்
இன்று
எதையும் சாதிக்குமாம்
அதுதானே
உங்களை 'சரித்திரப்
புருஷர்'
ஆக்கியது.

○ பேசும் வல்லமை
துப்பாக்கி குண்டுகளுக்கு
இருந்தால்
பல கொலைகள்
இங்கே நிகழ்ந்திருக்க
நியாயமில்லை.

○ ஆயுத
உற்பத்தியாளர்களுக்கு
ஓர்
அன்பான வேண்டுகோள்

○ பேசும் ஆற்றலுடன்
ஆயுதத்தை உற்பத்தி
செய்யுங்கள்
அவை சில
அநியாயங்களை
தடுப்பதற்கு
உதவும்.

○ 'உண்மை பேசி
உத்தமனாக வாழ்'
என்று சொன்னீர்கள்
ஆனால்
உண்மையைச் சொன்னால்
இங்குள்ளவர்களின்
உள்ளமெல்லாம்
எரிவது ஏன்?

○ சத்தியம் வெல்லும்-இதை
சரித்திரம் சொல்லும்
என்ற உண்மையை
புரிந்து கொண்டோம்.
இங்கு
வரலாறு ஒன்று
புதைந்து கிடக்கிறது-அது
விரைந்து வந்து
விதைகளைப்பரப்பும்-அவை
கிளைகள் அமைத்து
ஆலம் விழுதுகளாகும்.

— வனிதா மணாளன்

## தியாகத்தின் சின்னம்

வீடுகளில் பசுமாடுகளை வளர்க்கிறோம். அதில் இருந்து பாலைப் பெறுகிறோம். சாணியைப் பெறுகிறோம். ஆயினும் பசுமாட்டின் தத்துவத்தை நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்துக் கொள்வது நல்லது.

பசுமாடு தியாகத்தின் சின்னம். அது தான் சுரக்கும் பாலைத் தன்னுடைய கன்றுக்கு என்று மட்டுமே வைத்துக் கொள்ளாமல் பெரும் பகுதியை நமக்குக் கொடுத்து விடுகிறது.

பசுவானது நமக்குப் பயன் படாத புல்லையும் வைக்கோலையும், தவிட்டையும் சாப்பிட்டுவிட்டு, நமக்குப் பயன் தரும் பாலைக் கொடுக்கிறது.

குழந்தை முதல் பெரியோர் வரையில் எல்லோரும் அருந்தக்கூடிய எளிய உணவாக அந்தப் பால் அமைகிறது.

அப்படியான உணர்வை நாமும் பெற வேண்டும் என்று தான் நாம் பசுவைப் பூஜிக்கிறோம்.

நாம் சுயநலமில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். நமது உழைப்பும் அதன் விளைவும் பெரும்பகுதி பிறருக்குப் பயன்படவேண்டும். தியாக உணர்வைப் போற்றி வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சமுதாயத்திடம் நாம் கேட்பது கொஞ்சமாகவும் - நாம் கொடுப்பது நிறைவானதாகவும் அமைய வேண்டும்.

நம்முடைய உணர்வுகளும் செயல்களும் குழந்தை முதல் பெரியோர் வரையில் எல்லோருக்கும் நல்ல பயன் அளிப்பதாக அமைய வேண்டும்.

## முதலாவது மாதிரிச் சிறுவர் நூலகம் திறப்பு விழா

மகாத்மாகாந்தியின் 120வது பிறந்த தினமாகிய அக்டோபர் 2-ம் திகதி, அறவழி போராட்டக் குழுவின் முதலாவது மாதிரிச் சிறுவர் நூலகம், கொடிகாமம் பிரதேச சபைக் கட்டிடத்தில் திறந்துவைக்கப் படவுள்ளது

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற சிறுவர்களின் நன்மைகருதி இச்சிறுவர் நூலகத்தினைக் குழு ஆரம்பித்து வைக்கின்றது.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் திரு. வீ. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தின் போது சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரும், கொடிகாமம் பிரதேச சபையின் விசேட ஆணையாளருமாகிய திரு. பூ. சுந்தரம்பிள்ளை இந் நூலகத்தினைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார்.

செல்வம் வாழ்க்கையின் இலடசியமன்று அதன் கருவி.

# தியானம்

நியூயோர்க்கில் வால்டர்ரீட் மருத்துவ மனையில் அறுபது வயதுள்ள ஓர் அம்மையார் ஒரு டாக்டரைச் சந்தித்தார். அம்மையாரின் இடதுபக்க மார்பகத்தின்மேலே ஒருபெரிய கட்டி இருந்தது.

அது புற்றுநோய்க் கட்டி என்று ஊர்ஜிதம் செய்தார் டாக்டர். முற்றிப்போன நிலை. அதற்கு யாருமே சிகிச்சை செய்வதற்கில்லை என்பது டாக்டரின் முடிவு. ஆனல் அதை வெளிப்படையாகச் சொல்லாமல், ''அம்மா! கட்டி இன்னும் பழுக்காததால், ஆறு மாதம் கழித்து வாருங்கள்'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

அந்த அம்மையார் இன்னும் ஆறு வாரங்கள் கூட உயிர்வாழ மாட்டார் என்பது டாக்டருக்கு உறுதியாகத் தெரிந்த உண்மை. ஆயினும் எப்படிச் சொல்வது? அதனல் உண்மையை மறைத்து விட்டார்.

ஆறு வாரங்கள் என்ன? ஆறு மாதங்களும் ஓடிவிட்டன!

ஒரு வியப்பான சம்பவம் நடந்தது. டாக்டரின் முடிவுப்படி பரலோகம் போயிருக்க வேண்டிய அம்மையார் உயிரோடு மருத்துவ மனைக்கு வந்து டாக்டர் முன்னல் நின்றார்!

டாக்டர் முன்பு அம்மையாரைப் பார்த்த ஞாபகம் இல்லாமல் சோதனை செய்தார். '' உங்களுக்குப் புற்றுநோய் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்.

அம்மையார் சொன்னர், ''அதுதான் எனக்கும் தெரியவில்லை. ஆனல் ஆறு மாதங்களுக்கு முன்பு மார்பகத்தில் மிகப்பெரிய கட்டியுடன் வந்து உங்களைப் பார்த்தேனே ஞாபகம் இல்லையா? இப்போது அதைக் காணவில்லை!''

## ஒரு

''என்ன? அந்தப் பெரிய கட்டி இப்போது இல்லையா?'' டாக்டருக்குப் பேரதிர்ச்சி.

''கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து அடியோடு இல்லாமல் போய்விட்டது!''

''என்ன மருந்து சாப்பிட்டீர்கள்?''

''மருந்தா! மருந்தினல் பிரயோசனம் இல்லையென்று நீங்கள்தானே சொன்னீர்கள்?''

''அப்படியென்றல் வேறே என்ன செய்தீர்கள்?''

'' ஆண்டவனிடம் முறையிட்டேன்! பிரார்த்தனை செய்தேன்!''

''பிரார்த்தனையா?''

''ஆம்! நாள் தவருமல் செய்தேன் மணிக்கணக்கில் செய்தேன். ஆண்டவனை எண்ணியெண்ணி முறையிட்டேன்! மருந்து செய்யமுடியாததை ஆண்டவன்செய்துவிட்டார்.''

டாக்டருக்குப் பெரும் வியப்பு. மறுபடியும் அம்மையாரைச் சோதித்துப் பார்த்தார். பெரிய நிபுணர் அவர். புற்றுநோய்ச் சிகிச்சையில் நிகரற்றவர்! அவருக்கு அம்மையாரின் மார்பகத்தில் ஏற்கனவே புற்றுநோய் இருந்ததற்கான ஒரு சாதாரண சுவடு கூடத் தெரியவில்லை!

''ஆமாம், நீங்கள் எப்படி எந்த வகையில் பிரார்த்தனை செய்வது வழக்கம்?'' என்று கேட்டார் டாக்டர்.

'' தியானம் செய்யும்போது என்மனம் கசிந்து உருகும். கண்ணீர் மல்கும்!'' என்றர் அம்மையார்.

''இப்போது அந்தமாதிரி தியானம் செய்யுங்கள். நான் ஒரு சோதனை செய்யவேண்டியிருக்கிறது.'' என்று டாக்டர் கேட்க, அம்மையார் அதற்கு இசைந்து தியானத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

## சக்தி

அம்மையார் செய்தது ஆழ்ந்த தியானம்! டாக்டர் செய்ததோ பரிசோதனை!

நெஞ்சம் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிய நேரத்தில் அம்மையாரின் உடம்பில் இருந்து ஒரு துளி இரத்தத்தை எடுத்தார். அதையும், அம்மையார் சாதாரண நிலையில் இருந்தபோது எடுத்த இரத்தத்தையும் சோதித்து, ஒன்றுக்கொன்று என்ன மாறுபாடு என்பதையும் ஆராய்ந்தார்.

அம்மையார் சாதாரணமான நிலையில் இருந்தபோது எடுத்த இரத்தத்தில் இல்லாத சில நுண்பொருட்கள் தியானத்தில் இருந்தபோது எடுத்த இரத்தத்தில் காணப்படுகின்றன என்று கண்டுகொண்டார்.

அம்மையாரின் தியானம் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி! (உண்மைச் சம்பவம்



# நல்ல மாட்டுக்கு ஒரு அடி நல்ல பிள்ளைக்கு ஒரு சொல்

— தமிழினி சண்முகநாதன் —

குமார், ரகு, ரமணி மூவரும் ஒரே வகுப்பில் ஆண்டு ஆறும் வகுப்பில் படிக்கிறர்கள். ஒவ்வொருநாளும் காலையில் ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து ஒன்றகவே பாடசாலைக்கு வருவார்கள்.

அன்று பாடசாலையில் ஓர் இலக்கியவிழா நடைபெற ஏற்பாடாகி இருந்தது. குமார், ரகு, ரமணி மூவரும் ஆசிரியரின் சொற்படி நடப்பவர்கள், இருந்தாலும் ரகுவிடம் சிறிது முரட்டுக்குணம் உண்டு. பெரியவர்களைக் கண்டால் கேலி பேசி ஏளனம் செய்வான். இலேசில் பணியவே மாட்டான்.

அன்றைய இலக்கிய விழா நிகழ்ச்சியில் மூவரும் சேர்ந்து குழுப்பாடல் நிகழ்ச்சியில் பாடுவதாக இருந்தது.

தலைவர் அவர்கள் இலக்கிய விழா வைப்பதன் நோக்கத்தையும் அதன்மூலம் மாணவர்களின் ஆற்றல் வெளிப்படும் சக்தியையும் விளக்கினர். ''குழந்தைகள் அன்னை தந்தையருடன் அன்பாகவும் பணிவாகவும் பழகவேண்டும். இந்தப் பழக்கம்தான் வெளியிலும் பிறருடன் பழகும்போதும் வெளிப்படும்.

வணக்கத்திற்குரிய பெரியவர்களைக் கண்டால் இருகரம் கூப்பி வணங்கவேண்டும்.

பரிசுப் பொருட்கள் தரும் பொழுதும் பெரியவர்கள் மனமுவந்து ஏதும் தரும் பொழுதும் வணங்கி வாங்குதல்வேண்டும். நற்பண்புகளில் பணிவு மிகவும் முக்கியமானதாகும். இதனலன்றே, ''பெரியோரைக் கனம்பண்ணு'' என்று ஆன்றேர் கூறியுள்ளனர்'' என்று தலைவர் கூறியதும், ரமணியும் குமாரும் ரகுவைப் பார்த்தார்கள்.

ரகு தன்னைப்பற்றித்தான் தலைவர் கூறினரோ எனப் பயந்து கூனிக்குறுகி நின்றன். அடுத்த நிகழ்ச்சியில் குழுப்பாடல் இடம்பெற்றது. ரகு, ரமணி, குமார் மேடையில் ஏறினர்கள். ஒருகாலமும் தலைகுனிந்து வணக்கம் செலுத்தாத ரகு முதலில் கை கூப்பி அனைவருக்கும் வணக்கம் செலுத்தினன்.

''ஒற்றுமையாக நாம்
வாழ்வோம்
உண்மைபேசிப் பழகிடு
வோம்
வேற்றுமை மறந்து ஒன்றக
வேண்டும் பணிகள்
செய்திடுவோம்.
பெரியோர் சொற்படி நடந்
திடுவோம்
பிரியமுடனே உதவிடு
வோம்
வறியோர் சிறியோர் அனை
வருக்கும்
அன்புகாட்டி வாழ்ந்
திடுவோம்''

என்று மிக உற்சாகமாகப் பாடினர்கள். ரகுவும் அன்றுமுதல் பெரியோரை மதித்துவாழ்ந்து பாராட்டுகளைப் பெற்றன்.

# அ
# ற
# ம்

அறம் என்பது வாய்மை நெறியில் வாழ்வதும்- தூய்மை நெறியில் ஒழுகுவதுமாகும்.

மனத்தில் மாசற்ற தூய நிலையே அறம்.
மன்னுயிர் ஓம்பி, பிறர் நலம் பேணும் நல்வாழ்வாகிய இல்வாழ்வே அறம்.
மனம் தூய சிந்தனைகளை —
நல்ல சிந்தனைகளைக் கொள்ளுதல் அறம்.
நாவானது இன்சொல் நவிலுதல் அறம்.
கண்கள் நல்லனவற்றைக் காணுதல் அறம்.
செவிகள் இனியவற்றைக் கேட்டல் அறம்.
மெய் நற்காரியங்களைப் புரிதல் அறம்.
பிறர் வாழ, தான் வாழ்தலே தலையாய அறம்.

ஒருவனுடைய இளமை நில்லாது, உடம்பு நில்லாது, பெருஞ் செல்வம் நில்லாது. ஆனல், அவன் மேற்கொள்ளும் அறம் நிலையானது.

நிலையான அறத்திற்கு அரணாக நிற்பது நீதி. ஆனல் அறம் என்றும் மாருது. நீதி காலத்துக்கு ஏற்ப மாறுவது.

பகைவனது பேராயுதம் மார்பில் பாயவரும்போது அஞ்சா நெஞ்சத்துடன் நிற்பவன் வீரனல்லன். செல்வமிழந்தாலும், செத்தாலும் அறம் பிறழாதவனே வீரன்.

மனிதனுக்கு அறத்தைவிட ஆக்கமளிப்பது வேறு எதுவுமே இல்லை.

மனிதன் துய்க்கின்ற இன்பங்களுள், அறத்தால் துய்க்கும் இன்பமே சிறந்தது. இதுவே ஈந்துவக்கும் இன்பம்.



# மழலைப் பூக்கள்



**அன்பான குழந்தைகளே!**

ஒவ்வொருமாதமும் உங்களுடன் சிறு கலந்துரையாடல் செய்யப்போகிறேம். பிரியமானவர்கள் எங்களைச் சந்திக்கிறீர்கள். உங்கள் கிராமத்தில் அறவழிப் பாலர் பாடசாலை இருக்கிறதா? நீங்கள் சிறுவர் குழுவில் இருக்கிறீர்களா? உங்கள் தம்பி தங்கையர்கள் பாலர் பாடசாலையில் கல்வி பயிலுகிறர்களா? என்னும் சிறு கேள்விகள் கேட்போம். நீங்கள் பதில் கூற வேண்டும்.

உங்கள் கிராமத்தில் அறவழிப் பாலர் பாடசாலை என்ன சேவை செய்து வருகிறது? பாடசாலை ஏற்பட்டவுடன் கிராமத்தில் கண்டுள்ள வளர்ச்சி என்ன என்பதுபோன்ற விடயங்களை எமக்குக் கூறவேண்டும். இன்றேல் ''எனது கிராமமும் அறவழிப் பாலர் பாடசாலையும்'' எனும் தலைப்பில் மேற்கூறிய விபரங்களை எழுதி அனுப்புங்கள்—நிச்சயமாகப் பிரசுரிப்போம்.

— இராஜி அக்கா

சிறுவர் நாங்கள் கூடுவோம்
சிரித்து மகிழ்ந்து பாடுவோம்
பகைவர் இல்லை எமக்குள்ளே
பாசம் உண்டு பாருமே!

## சிறுவர்

மோகன் தந்த மாம்பழம்
மேரி கலா சாந்தனும்
காகம் போலக் கூடியே
பகிர்ந்துண்டு மகிழ்வோமே!

## நாங்கள்

எறும்பு போலச் சேருவோம்
எடுத்த பொருள் சேமிப்போம்!
குறும்பு செய்த போதிலும்
குணமானவனுய் வாழுவோம்

## கூடுவோம்

பெரியவரைப் போற்றுவோம்
புத்திகளைக் கேட்போம்
அறிவுரைகள் நல்லொழுக்கம்
அன்புவழி செல்வோம்.

— இராஜி அக்கா

**உழைக்காமல் உண்பவன் திருடன்.**

# கலந்துரையாடல்களில் கடைப்பிடிக்க வேண்டியவை

நாலுபேர் கூடிப் பேசுகிறார்கள். ஒரே சத்தம்—இரைச்சல்—கூப்பாடு—வெறுப்பு. கடைசியில் கூட்டம் சண்டையில் முடிகிறது. ஏன் கூடினோம்? என்ன பேசினோம்? என்ன பொதுத் தீர்மானத்துக்கு வந்தோம்? என்பவற்றை மறந்து ஒருவர்மீது ஒருவர் குற்றங்களையும், குறைகளையும் கண்டு கொள்வார்கள்.

உண்மை எது என்று கண்டுபிடிக்க உண்மையாகவே விரும்புகிறவர்கள் கூடும்பொழுது அடிபிடிக்கு அங்கே இடமில்லை.

கலந்துரையாடல் என்றால், அதில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்க வேண்டிய சுய கட்டுப்பாடுகள் பல உள்ளன.

1. உங்கள் முறை வரும் போதுதான் பேசவேண்டும். குறுக்கிட்டுப் பேசக்கூடாது.

2. பிறர் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்கவேண்டும்.

3. எதிராளி சொல்வதில் நியாயமிருந்தால் அதை உடனே ஒப்புக்கொள்ளவேண்டும்.

4. வழ வழ என்று பேசக்கூடாது. சொல்லிய கருத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும். ஐயப்பாடு இல்லாத சொற்களைக்கொண்டு உணர்த்துதல் வேண்டும். எதிராளி எழுப்பும் கேள்விக்கு விடை இறுக்கவேண்டுமே தவிர, வெறுமே மறுக்கக்கூடாது.

5. கலந்துரையாடலில் வெற்றிபெறுவதல்ல முக்கியம். உண்மையைக் கண்டறியும் முயற்சிக்கு எவ்வித முட்டுக்கட்டையும் போடக்கூடாது.

6. உரத்த குரலும் உஷ்ணமும் வேண்டியதில்லை.

கலந்துரையாடல்களில்பங்கு கொண்ட உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்துக்களைக் கூட்டிக் கழித்து ஐந்தொகை போடுவதல்ல கலந்துரையாடல்.

கலந்துரையாடலின் போது ஒருவர் மற்றொருவரின் கருத்துக்களை முழுமையாகப் புரிந்து கொள்ளவேண்டும். கலந்துரையாடல் இருவர் மோதுகின்ற வழக்காடு மன்றமல்ல. கருத்துக்களைப் பண்புடைய பாணியில் சொல்வதற்குப் பழகிக் கொள்ளல்வேண்டும்.

கலந்துரையாடலில் பங்கு கொள்கின்ற உறுப்பினர் மீது ஐயப்படுதல், ஆக்கிரோஷித்துப் பேசுதல், விரோத மனப்பாங்கு காண்பித்தல், சினம், வெறுப்புத் தோன்றப் பேசுதல் என்பன கலந்துரையாடலின் அடிப்படை நோக்கையும், பண்பையும் கெடுத்துவிடும்.

கலந்துரையாடல்கள் எப்போதும் அனைத்து நட்புறவுச் சூழ்நிலையில் நிகழவேண்டும். சகோதரத்துவக் கோட்பாட்டினையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

# குழந்தை வளர்ப்பு

குழந்தைகள் நம் சமுதாயத்தின் பெறுமதிமிக்க செல்வங்கள். இன்றைய குழந்தைகள்தான் நாளைய சமுதாயத்தின் நற்பிரஜைகள்—காப்பாளர்கள்—தலைவர்கள்.

குழந்தைகளைத்திட்டமிட்டு, சரியான வழிப்பிரகாரம் வளர்க்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

குழந்தைகளுடைய விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த விருப்பங்களை நிறைவேற்றாமல் பெற்றோர்—பாதுகாவலர் தடைசெய்தால், ஆணைபோட்டால் .வேறுவிதமாக அந்தக் குழந்தைகள் தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்யும்.

அதனுடைய விருப்பம் சரியானது அல்ல என்று புரிய வைத்துத்தான் அதனுடைய விருப்பத்திற்கு எதிராகப் பெற்றோர்கள் செயல்படவேண்டும்.

விருப்பம் என்பதும் ஆர்வம் என்பதும் மனிதனுக்கு இயற்கையாக இருக்கின்ற உயிர்ப்பாடு. இந்த உயிர்ப்பாட்டினை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆக, முன்னேற்றத்துக்குத் தடை என்ன? பயம் இருக்கிறதா? சுதந்திரம் இல்லையா? நம்மாலே முடியும் என்கிற நம்பிக்கை இல்லையா? ரொம்பப் பேர் நம்மாலே முடியும் என்கிற நம்பிக்கையை உண்டாக்குவது இல்லை.

குழந்தைகள் மத்தியில் ஆரம்பத்தில் இருந்தே நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி, கடவுள் பக்தி, நாட்டுப்பற்றினை வளர்த்துக் கொண்டால்தான் குழந்தைகளைச் சமுதாயத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் எதிர்காலத்தில் காண முடியும்.

# பாலர் கல்விக்கு ஒருங்கிணைந்த பாடத்திட்டம் அவசியம் வேண்டும்

## அறவழிப் போராட்டக்குழு கோரிக்கை!

இன்று தமிழர் பிரதேசங்களில் மூலைக்கு மூலை பாலர் கல்வி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான பாலர் கல்வி நிலையங்களை அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களே நடாத்தி வருகின்றன. வேறு சிலவற்றினைக் கிராமிய அமைப்புகளும், தேவாலயங்களும் நடாத்துகின்றன.

மொத்தத்தில் எமது இனத்தின் எதிர்காலச் செல்வங்களின் கல்வியில் எல்லோரும் அதிக அக்கறை காட்டி வருகின்ற தன்மையையிட்டு ஒவ்வொருவரும் பெருமை கொள்ளலாம்.

ஆயினும் —

இப் பாலர் கல்விக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் திட்டம் பொதுவாக உருவாக்கப்படாமல் இருப்பது கவலைக்குரிய விஷயமாகும்.

''இது என்ன பாலர் கல்வி தானே''? என்ற மனப்போக்கில் எம் மத்தியில் இருக்கின்ற கல்விமான்கள், அறிஞர்கள், சமுதாய நலன் பேணுவோர் இனியும் இருக்கக்கூடாது!

இதுவிடயத்தில், தமிழர் பிரதேசத்தில் பாலர் கல்வியில் ஈடுபட்டுவரும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை அழைத்துப் பேசி, சமுதாயத்துக்குப் பயன்தரும் வகையிலான ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தினை உருவாக்க முயல வேண்டும்.

பாலர் கல்வித் திட்டத்தில் அரசாங்கம் எவ்விதமான அக்கறையும் காட்டாமல் இருந்து கொள்கிறது என்பது யாவரும் அறிந்ததே.

ஆதலால், பாலர் கல்வியில் உழைத்துவரும் ஸ்தாபனங்கள் தமது தனித்துவங்களை அப்பால் விட்டுவிட்டு, பாலர்களின் நன்மை கருதி, ஒரு பொதுவான வேலைத்திட்டத்திற்கு வரும்படி அறவழிப் போராட்டக் குழு கோரிக்கை விடுக்கின்றது.


# உலகப் போர்கள் மூழ்வது எப்படி?

இருபதாம் நூற்றாண்டில் உலகப் போர்கள் இருமுறை நடந்து பேரழிவைச் சந்தித்து விட்டது மனிதகுலம். மூன்றுவது உலகப்போர் எப்போது மூழுமோ என்ற அச்சம் மனித குலத்தில் வேரூன்றியுள்ளது. மூன்றுவது உலகப்போர் இடம் பெற்றுவிடக் கூடாதே என்ற எண்ணம் உலகத் தலைவர்களிடம் காணப்பட்டாலும்கூட, இன்னும் அவர்களுக்குப் புத்தியும், தெளிவும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

யுத்தங்கள் மனித உள்ளங்களில் சுரக்கின்ற வெறுப்பிலே தான் முளைக்கின்றன. இன வெறி, அண்டை அயலார்மீது பகைமை வெறி, பேராசைகாரணமாகத் தோன்றும் பண வெறி, மற்றும் பதவி வெறி, புகழ் வெறி, அதிகாரவெறி—இத்தகைய வெறிகளால் பீடிக்கப்பட்ட உள்ளங்களிலேதான் யுத்தங்கள் பிறப்பெடுக்கின்றன.

மனித நேசம் என்ற ஈரம், உள்ளங்களில் வெறித் தீயை அடக்குகிறது. வெறுப்புக் கனலைத் தணிக்கிறது. மனிதநேசமாகிய அணுகு முறையால் ஏற்றத்தாழ்வுகளால் உண்டாயிருக்கும் இன்னல்கள் தீரும். சமத்துவத் தென்றல் வீசும் பொழுது. சமுதாய நீதி பாதுகாப்புப் பெறும், பசியும் நோயும் மறையும்.

உலகில் மனித பண்பு உயர்ந்திட, உயர்ந்திட சமுதாயத்தில் பணமோகம் குறைந்து, தியாக நல்லறம் பெருகும். அமைதியும் மகிழ்ச்சியும் மக்கள் முகங்களிலே சுடர்விடக் காண்போம். அப்போது கலகங்களுக்கோ, பூசல்களுக்கோ, போர்களுக்கோ இடமில்லாமல் போகும்.



# காந்தியின் அமுத மொழி

★ கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றங் குறையை உணராதவன் இருக்கிறானே அவன்தான் சரியான குருடன்.

★ நீங்கள் எதைச் செய்தாலும், உங்கள் உள்ளத்திற்கும், உலகத்துக்கும் உண்மையாகவே நடந்துகொள்ளுங்கள்.

★ வாழ்வின் ஒரு துறையில் தவறான முறையில் செயலாற்றும் மனிதன், இன்னொரு துறையில் நல்ல முறையில் செயலாற்ற முடியாது. வாழ்க்கை என்பது பிரிக்கமுடியாத ஒரு முழுப் பொருள்.

★ என்னுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். என்னிடத்தில் இரகசியங்கள் கிடையா. இரகசியங்களை நான் விரும்புவதும் இல்லை.

★ தனது புகழையே பாடிக்கொண்டிருக்க வானொலியைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் எந்த அரசாங்கமும் அரசாங்கமாக இருக்கத் தகுதி உடையதல்ல.

★ நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளை சிறையில் தள்ளுவது பெரிய தவறு.

★ அடக்கமற்ற மனிதன் வெளியிடும் பொய் வதந்திகளால் அவன் தனக்கு மட்டுமல்ல, தன் சமுதாயத்துக்கே பெரும் கேட்டினை விளைவிக்கின்றான்.

தொகுப்பு: கே. கே.

# டால்ஸ்டாய் சொன்னார்

சோவியத் ருஷ்யாவில் பிரபல்யமிக்க படைப்பாளியாகத் திகழ்ந்த டால்ஸ்டாயிடம் ஓர் இளைஞன் வந்தான். அவ் இளைஞன் டால்ஸ்டாயைப் பார்த்து, ''என்னிடம் எதுவுமேயில்லை நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டு நின்றான்.

சற்றுநேரம் அந்த இளைஞனை டால்ஸ்டாய் உற்றுப் பார்த்தார்.

''வாலிபனே, உன்னிடம் எதுவுமே இல்லையா? சரி, நான் நூறு ரூபிள் தருகிறேன் உன்னுடைய விரல்களில் ஒன்றைக் கொடு'' என்றார்.

அவன் மறுக்கும் அளவில் நின்றான். ஒருவிரல் இல்லாதது எனக்குக் குறையாயிருக்குமே என்று முணுமுணுத்துக் கொண்டான்.

''சரி ஆயிரம் ரூபிள் தருகிறேன். உனது கால்களில்தான் ஒன்றைக் கொடேன்''என்றார்.

''சரி, பத்தாயிரம் ரூபிள் தருகிறேன் உன் கண்களிலாவது ஒன்றைக் கொடு'' என்று டால்ஸ்டாய் கேட்டதுதான் தாமதம் அந்த வாலிபன் புறப்படத் தயாராகி விட்டான். விட்டால்போதும் என்ற நிலை.

அப்பொழுது டால்ஸ்டாய் அவனைப் பார்த்து, 'தம்பி' என்றழைத்தார். ''தம்பி பார்த்தாயா ! உன்னிடமா ஒன்றுமில்லை. உன் உடலில் உள்ள ஒவ்வொரு அங்கமும் விலைமதிப்பற்றவை. அந்த மூலதனத்தைப் பயன்படுத்தி உழைத்து முன்னேறு'' என்றார்.

இதனைக் கேட்டதும் அந்த வாலிபனுக்குத் தன்னையறியாத ஒரு புதுவித உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டது.

''புதிய தன்னம்பிக்கையுடன் செயல்படப்போவதாக டால்ஸ்டாயிடம்'' கூறிவிட்டுச் சென்றான்.

அறவழி
NONVIOLENCE

# தென்கிழக்காசியாவில் அடிமைத் தொழிலில்--- 20 மில்லியன் சிறுவர்கள்!

## அறநோக்கு

### "அக்டோபர் 2"

உலகில் பல நாடுகளில் வாழ்கின்ற கோடிக் கணக்கான மக்களின் இதயங்களில் அன்பு கொண்டு — அக்கறையுடன் நினைவு கூரப்படுகின்ற ஒரு புனிதமிக்க நாளாக அக்டோபர் 2-ம் திகதி திகழ்கின்றது.

**1969**-ம் ஆண்டு இதேமாதம் இதே நாளில் தான் அறவழியின் அண்ணல்! அன்பின் திருவுருவம்! உலக சமாதானத்தின் காவலன்! வீரமிக்க — தீரமிக்க பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தை அறவழிப் போராட்ட முறையால் அடிபணிய வைத்து, இந்திய நாட்டுக்குச் சுதந்திரத்தினைப் பெற்றுக்கொடுத்த பேராளர் 'மகாத்மா காந்தி' அவதரித்த பெருநாள்.

உலகில் அன்பு — அறவழி — சமாதானம் நிலைக்கவேண்டும் — அழிவின் விழிம்பில் இருந்து மக்களை ஆக்கத்திற்குக் கொண்டுவரல் வேண்டுமெனப் பாடுபட்டு உழைத்து வருகின்ற ஆயிரக் கணக்கான அறவழி—சமாதான—காந்திய இயக்கங்களுக்கு இத்தினம் மிக முக்கியத்துவமுடைய நாளாகும்.

காந்தி மகானின் 120-வது பிறந்தநாள் ''என் வாழ்க்கையே என் செய்தி'' (**My Life is my message**) என உலக மக்களுக்கு மிக நிதானத்துடனும், அடக்கத்துடனும் கூறி, தன் வாழ்க்கையை மக்களின் பின்பற்றுதல்களுக்கு எடுத்துக்காட்டாக்கினர்.

மனிதகுலம்—தளைத்து—விருத்திகாண வேண்டுமாயின், அறவழிதான் மிகச்சிறந்த — உகந்த வழியெனக் கருதும் கோடானுகோடி மக்களின் நெஞ்சங்களில், நினைவுகளில் இன்னும் உயிரோவியமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மிகப் பிரசித்திபெற்ற ஒரே உலகத் தலைவர் ''மகாத்மா காந்தி'' என்பவர்தான் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்.

காந்தியினால் உலகிற்கு வழங்கப்பட்டது தான் — ''காந்தீயம்.'' காந்தீயம் ஆழம்காண முடியாத ஒரு பெருங்கடல்!

காந்தீயத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு, "காந்தீயம் நடைமுறைக்கு ஒவ்வாதது", ''காந்தீயம் சந்நியாசிகளுக்கும், வயதாளிகளுக்கும் தான் பொருத்தமானது'' என்று நம்மவர்கள் கூறுவது வழக்கமாகிவிட்டது.

மனிதகுலம் பல 'இஸங்க'ளைக் கண்டுவிட்டது. பல ''இஸங்கள்'' நடைமுறை, யதார்த்த வாழ்வுக்கு அப்பாற்பட்டது எனவும் அனுபவ ரீதியாகக் காணப்பட்டும்— உணரப்பட்டும் விட்டது.

ஆனால் ''காந்தீயம்'' துருப்பிடித்துவிட்ட இரும்பல்ல! தேனினும் இனிய கரும்பு! காந்தீயத் தேனைப் பருகப்பருகத்தான் அதன் சுவை புரியவரும்! காந்தீயத்தை வாழ்க்கை நெறியாகக் கொண்டால் இதயத்தில் ஒளிவீசும்!

''அகிம்சை நெறியே எனது விசுவாசமிக்க முதல் பாடம் — எனது சித்தாந்தத்தின் கடைசிப்பாடமும் அதுவே'' என்று கூறியுள்ளார் காந்திமகான்!

காந்தி பிறந்து 120 ஆண்டுகளாகி விட்டன. ஆயினும் காந்தியக் கொள்கைகள் இன்றும் உயிர்வாழும் தத்துவமாக — அதுவும் நடைமுறைப் படுத்தக்கூடிய ஓர் உயர் தத்துவமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது!

மகாத்மா காந்தியின் பிறந்தநாளாகிய 'அக்டோபர் 2-இல்' காந்தியின் ஆத்ம ஒலியை எங்கும் பரவச்செய்யத் திடசங்கற்பம் பூணும் நாளாகக் கொள்வோமாக!

''தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுமார் இருபது மில்லியன் சிறுவர்கள் அடிமைத் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். இச்சிறுவர்கள் மிகவும் ஆரோக்கியமற்ற நிலைகளில் தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணமாக, பசி, பட்டினியால் பீடிக்கப்பட்டு வறுமையால் வாடி வதங்கி வருகின்றனர்.''

இவ்வாறு இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த சிறுவர்களின் அடிமைத் தொழில் பற்றிய மாநாட்டில் சிறுவர் தொழிலாளர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த முக்கிய மாநாட்டுப் பிரமுகரான திரு. சுவாமி அக்கினிவேஸ் என்பவர் தெரிவித்துள்ளார்.

அவர் அம் மாநாட்டில் மேலும் தெரிவிக்கையில், "ஆறு வயதுக்கும் பன்னிரண்டு வயதுக்குமிடைப்பட்ட ஏழ்மைச்சிறுவர்கள், கிராமங்களில் இருந்து பலவந்தமாகக் கடத்தப்பட்டு, நகரங்களில் இயங்கும் தொழிற்சாலைகளில், பயமுறுத்தப்பட்டு வேலை வாங்கப் படுகின்றார்கள். தொழிற்சாலைகளில் மிகக் கூடுதலான நேரங்களில் வேலை செய்யப்பண்ணப் படுவதுடன், அவர்களுக்குவதுடன், அவர்களின் புனர் வழங்கப்படுகின்ற சம்பளங்களும் மிக, மிகக் குறைவாகவுமே இருக்கின்றன என்பதை சிறுவர் தொழிலாளர் விடுதலை முன்னணியினர் கண்டு பிடித்துள்ளனர்'' எனவும் 'இவ்விதம் அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுவரும் சிறுவர்கள், படிப்பறிவற்றும் உடல் ரீதியாக ஆரோக்கியமற்றவர்களாகவும் இருக்கின்றனர்'' எனவும் தெரிவித்தார்.

அவர் இம் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ''சிறுவர் தொழிலாளர் விடுதலை முன்னணியானது, அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்ற சிறுவர்களை, முதலாளிகளின் பிடியில் இருந்து விடுவித்து, அவர்களின் எதிர்கால வளமிக்க வாழ்வுக்கு ஒளியேற்றக்கூடிய விதத்தில் பணிகளை ஆற்றி வருகின்றதெனவும்,''

''இம் முன்னணியின் தீவிர முயற்சி காரணமாக கடந்த பெப்ரவரி மாதம் வரை சுமார் 33,000 சிறுவர்களை அடிமைத் தொழில் ஈடுபாட்டில் இருந்து மீட்டெடுத்துள்ளது''

என்றும், ''இவ்விதம் மீட்டெடுக்கப்படும் சிறுவர்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்கு வாழ்வுக்குமான ஆரம்ப வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.'' என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. சுவாமி அக்னிவேஸ் மேலும் குறிப்பிடுகையில், ''பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும், சிறுவர்கள் பலவந்தமாக அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள்'' எனவும், ''இங்கெல்லாம் இவ்விதமான அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்ற சிறுவர்களின் மீட்சிக்காக, தமது முன்னணி பாடுபடப்போவதாகவும்'' தெரிவித்துள்ளார்.

## வாசகர்களுக்கு!

'' அறவழி '' உங்களின் பத்திரிகை. வாசகர்களின் நன்மை, தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சி, மேம்பாடு கருதி வெளியிடப்படும் பத்திரிகையின், தரம், விடய தானங்கள் பற்றிய உங்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களை புதிய சமுதாய வெளியீட்டகம் எதிர்பார்க்கின்றது. தயவு செய்து உங்கள் கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

— நிர்வாகி —

## BEING PEACE

"IF WE ARE PEACEFUL,
IF WE ARE HAPPY,
WE CAN BLOSSOM
LIKE A FLOWER,
AND EVERYONE IN
OUR FAMILY,
OUR ENTIRE SOCIETY,
WILL BENEFIT
FROM OUR
PEACE"

— THICH WHAT HANH

## அறவழி ஆய்வரங்கம்

''அறவழி'' பத்திரிகையின் இரண்டாவது ஆய்வரங்கம் கடந்த மாதம் 17ம் திகதி நுணுவில் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதிபர் திருமிகு. எஸ். நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வரங்கத்தினை, சாவகச்சேரி நீதவான் திருமிகு மு. திருநாவுக்கரசுவும், திருமதி பேபி கதிர்காமநாதனும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

செல்வி. வீரதர்மினி வரவேற்புரை நிகழ்த்தினர். திருமிகு. இராஜி. சண்முகநாதன் நோக்கவுரையை வழங்கினர்.

'அறவழி' பத்திரிகை பற்றி ஆய்வுரைகளை நீதவான் திருமிகு. மு. திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமிகு. கு. றஞ்ஜகுமாரும் நிகழ்த்தினர்.

டாக்டர். ரீ. சிங்கராஜா, திருமிகு. வை. தனபாலசிங்கம், திருமிகு. எஸ். கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளை வழங்கினர்.

## வாழைத்தண்டில் இருந்து

### தும்பு எடுக்கும் பயிற்சி

வாழைத் தண்டில் இருந்து தும்பு எடுக்கும் பயிற்சிநெறி ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு ஆரம்பிக்கவுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இப்பயிற்சிநெறியில் இருபது கிராமப்புற மகளிர் இணைத்துக்கொள்ளப் படுவர்,

இப்பயிற்சிநெறியில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களைக் குழுவின் பணியகத்திற்கு அனுப்பிவைக்கவும். இப்பயிற்சி இருவார காலத்திற்கு இடம்பெறும்.

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989 ஐப்பசி மாதம் அச்சேற்றி வெளியிடப்பட்டது.